மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா எண் 32, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

## வால்பாறை அரசு ஊழியர் குடியிருப்பு.

32 —

*1041—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வால்பாறை தொகுதியில் மலைப்பகுதியில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்துத் திட்டங்களையும் சிந்தாமல் சிதறாமல் சீர்படுத்தி, நெறிப்படுத்தி மக்களாட்சியின் நல்லாட்சியை

முற்பகல் 10-15

நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இதை அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும். காரணம், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலத்திலிருந்து, வால்பாறை தொகுதி நமது அரசுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது என்றும், மேலும் வால்பாறையை தாலுகாவாக அமைக்கப்பட்டுள்ளது என்றும், அங்கு மழைக் காலங்களும் குளிர் காலங்களும் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அரசு ஊழியர்களுக்கு வழங்குவதற்கு வீடுகள் இல்லாத காரணத்தினாலும், தனியாரிடமிருந்து வாடகைக்கு வீடுகள் இல்லாதக் காரணத்தினாலும், தனியார் நிறுவனங்கள் வீடுகள் கட்டுவதற்கு அங்கு வசதிகள் இல்லை என்கிற காரணத்தினாலும், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : கவனிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்பைப் பொறுத்தவரை, மாநிலத் தலைநகரங்களிலும், மாவட்ட மற்றும் வருவாய்க் கோட்ட தலைமையகங்களிலும் மட்டும்தான் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தர முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. வால்பாறை ஒரு மலைப் பகுதியாக இருக்கிற காரணத்தினால், அங்கிருக்கிற அரசு ஊழியர்களுடைய தேவையைப் பொறுத்து, அடுத்த நிதியாண்டில் இது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–11–1984 அன்று 302892 நகல்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் வட்டாட்சியர் அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்ற ஒரு திட்டத்தைத் தீட்டி, அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்ற ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார். அதற்கு, அடுத்தபடியாக 8–9–1989 அன்று எல்.ஏ.-2/3537/87 என்ற ஓர் அறிக்கையில் 'எக்ஸிக்யூடிவ் எஞ்சினியர், ஸ்பெஷல் டிவிஷன், தமிழ்நாடு ஹவுஸிங் போர்டு' என்ற அதிகாரி, வால்பாறை அரசு குடியிருப்புகள் கட்டுவது தொடர்பாக இவ்வலுவலகம், வால்பாறை வட்டாட்சியரிடம் தொடர்பு கொண்டு வருகிறது; மேற்கொண்டு, திட்டத்திற்குத் தேவையான இடம், கோரிக்கையின்படி தேர்வு செய்தபின்பு, அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடுகள் கட்டுவதற்கு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரியப்படுத்தியிருக்கிறார். அதற்கு அடுத்தபடியாக, 9–8–1990.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். அதை எல்லாவற்றையும் படிக்க வேண்டுமென்றால், அமைச்சரிடம் உங்கள் மொத்த அறிக்கையையும், கோரிக்கையாக வேண்டுமானால் வைக்கலாம். இப்போது, 'இதுமாதிரியெல்லாம் பலர் எழுதியிருக்கிறார்கள்' என்பதெல்லாம் வேண்டாம்; கேள்வியாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்ட்–2விலேயாவது இதைச் சேர்த்து, ஆவன செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, இதுபோல பல்வேறு வட்டாட்சித் தலைமையகங்களில் இப்படிப்பட்டத் தேவைகள் கிளம்பி இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அடுத்த நிதியாண்டில் பரிசீலித்து, ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. பழனிசாமி, கேள்வி, வால்பாறை தொகுதியைப் பற்றியது.

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள், அதிகாரிகள், ஓரிடத்திலிலிருந்து மற்றோர் இடத்திற்கு மாறுதல் செய்யும்போது, அவர்கள் வீடுகள் கிடைக்காமல் பெரிதும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, எல்லா நகரங்களிலும் அரசு ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு குடியிருப்புக்கு வாடகை வீடுகளை, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களின் அரசினுடைய லட்சியமாகவும் நோக்கமாகவும் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று தேர்தல் அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. வருகின்ற ஐந்தாண்டு காலத்தில், சுமார் 10 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதைக் கருத்தில்கொண்டு, தேவையையும், i.e. demand-ஐயும் பார்த்து அரசு ஆவன செய்யும். அதற்கான திட்டங்கள் கவனத்தில்கொண்டு, முறையாக வகுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் வால்பாறை தொகுதி இருக்கிறது. ஆகவேதான், கோவை மாவட்டம் என்று சொல்கிறேன். கோவை மாவட்டத்தில், கோவைப்புதூர் போலீஸ் குடியிருப்பு இருக்கிறது ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவைப்புதூர் என்பதற்கொல்லாம் அதில் இடம் இருக்காது; அதற்கு பதில் வராது. அது சம்பந்தமாக ஏதாவது துணைக் கேள்விகள் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜு : நிறைய வீடுகள் சென்ற ஆண்டில் கட்டி, அவற்றில் குடிபோகாமல் இருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டன. அந்த வீடுகள் கட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய போலீஸ் காலனியில் சுமார் 21 வீடுகள் ஏற்கெனவே காவலர்

களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. மீதம் இருக்கின்ற கொடுக்கப்படாத வீடுகளை, வீட்டு வசதி வாரியத்திற்கு ஒப்படைக்கக் கோரி இருக்கின்றது அரசு. ஆகவே, அது சம்பந்தமாகப் பரிசீலித்து, அதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) முதலமைச்சருக்குத் தேசியப் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு தொடர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பாதுகாப்புப் பற்றி ஒரு முக்கியமான பிரச்சினையை அவையிலே, எழுப்ப வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். சிங்காரம், திரு. தேனி பன்னீர்செல்வம் ஆகியோர் என்னுடைய அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். அப்பிரச்சினையை எழுப்புமாறு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பாதுகாப்பைப் பற்றிய செய்தியாக அந்தச் செய்தி இருக்கிற காரணத்தினாலே, அதற்கு ஒரு தனி முக்கியத்துவம் நம்மைப் பொறுத்தவரையில் இருக்கிறது. தேசியப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அதிரடிப் பயிற்சி பெற்ற கறுப்புப் பூனைகள் இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்றார்கள். அவர்களைத் திரும்பப் பெற இருப்பதாக அந்தச் செய்தி கூறியிருக்கிறது. ஏற்கனவே, இளைய பாரதத்தின் எழுச்சி முரசமாக விளங்கிய. இராஜீவ் காந்தி அவர்களை நாம் பறி கொடுத்திருக்கிறோம். அதற்குக் காரணம், பாதுகாப்பிலே ஏற்பட்ட கோளாறு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. ஏற்கனவே ஒரு பலி. அதாவது, 'செக்யூரிட்டி லேப்ஸ்', அப்படியிருக்கும் போது, மீண்டும் தவறுதல் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய